# கறுப்பு அன்னங்கள்

மாத்தளை சோமு



நர்மதா

# கறுப்பு அன்னங்கள்

ஒரு நவீன சிறுகதைத் தொகுதி

மாத்தளை சோமு

நர்மதா பதிப்பகம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார்
தியாகராய நகர், சென்னை—600 017

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கருப்பு அன்னங்கள் | 15 |
| 2. | அவர்களின் கிரிக்கெட் | 27 |
| 3. | ஆத்மா | 36 |
| 4. | யந்திரமும் அழும் | 46 |
| 5. | ஆகாயம் | 55 |
| 6. | அந்தப் புத்தகம் | 64 |
| 7. | வேர்கள் | 76 |
| 8. | பூக்கடை | 86 |
| 9. | முகம் | 99 |
| 10. | இந்த தாயின் வயது | 113 |
| 11. | ஒரு பிடி மண் | 128 |
| 12. | மகாபாரதத்து ஐயர் | 139 |
| 13. | லயத்துப் பயல் | 150 |
| 14. | எல்லை தாண்டா அகதிகள் | 165 |



## திரு.மாத்தளை சோமு

**ம**னிதனை உயர்த்தவே எழுத்து என்பதில் அசையாத நம்பிக்கையைக் கொண்ட மாத்தளைசோமு 'தேசம்' மாறிய போதும் தமிழில் நேசம் கொண்டவராகவே ஆஸ்திரேலியாவில் இருந்து எழுதிக் கொண்டிருக்கிறார். இவரின் சிறுகதைகள், குறுநாவல்கள், கவிதைகள், நேர்காணல், கட்டுரை, நாவல்கள் என்பன இலங்கை வீரகேசரி, தினக்குரல், தினகரன், சிந்தாமணி, தினபதி, சிரித்திரன், மாணிக்கம் மற்றும் தமிழக சஞ்சிகைகளான தினமணி, கணையாழி, சுபமங்களா, தீபம், கல்கி, குங்குமம் ஆகியவற்றிலும் லண்டன் ஈழகேசரி - கனடா தாயகம் ஆகிய ஏடுகளிலும் மலேசியாவில் தமிழ் நேசன், மலேசிய நண்பன், மக்கள் ஓசை, தராசு ஆகிய இதழ்களிலும் சிங்கப்பூர் தமிழ் முரசு இதழிலும் பிரசுரமாகியுள்ளன.

"நமக்கென்றொரு பூமி — அவன் ஒருவனல்ல" ஆகிய இவரின் சிறுகதைத் தொகுதிகள் பல இதழ்களின் பாராட்டைப் பெற்றன. அவர்களின் தேசம் என்ற சிறுகதைத் தொகுதி தமிழ்நாடு (கோவை) லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கிய (1995) விருதினைப் பெற்றது. 'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்' என்ற நாவல் இலங்கை சாகித்திய விருதினையும் 'எல்லைதாண்டா அகதிகள்" என்ற நாவல் இலங்கை சுதந்திர இலக்கிய சங்கத்தின் சிறந்த நாவலுக்கான விருதை (1994)யும் பெற்றது.

மலேசியாவில் நன்கு அறிமுகமான இவர் மலேசியாவுக்கும் ஏனைய நாட்டு தமிழ்ப் படைப்பாளிகளுக்கும் இலக்கிய பாலம் அமைக்கும் முயற்சியின் அடையாளமாக மலேசிய தமிழ்ச் சிறுகதைகளை தொகுத்து வெளியிட்டார்.

இதுவரை நான்கு சிறுகதைத் தொகுதிகள் , - நான்கு நாவல்கள், - குறுநாவல் - நாடோடிக் கதைகள் என பத்து நூல்கள் இவரின் படைப்பில் நூலாகியுள்ளன.